## முதல் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

மதிப்பெண்: 60

### தமிழ்

வகுப்பு - ஆறு - ____________ நேரம்: 2மணி

**I. சரியான விடையைத் தேர்வு செய்க:** 10 × 1 = 10

1. நண்பர்களுடன் ______________ விளையாடு.
   அ) ஒருமித்து ஆ) மாறுபட்டு இ) தனித்து ஈ) பகைத்து
2. ‘மா’ என்னும் சொல்லின் பொருள் ______________
   இ) மாடம் ஆ) வானம் இ) விலங்கு ஈ) அம்மா
3. ஒருவர்க்குச் சிறந்த அணி ______________
   அ) மாலை ஆ) காதணி இ) இன்சொல் ஈ) வன்சொல்
4. ஏற்றத் தாழ்வற்ற ______________ அமைய வேண்டும்.
   அ) சமூகம் ஆ) நாடு இ) வீடு ஈ) தெரு
5. மனித உருவம் கொண்ட ரோபோ ______________ உயரம் இருந்தது.
   அ) 6 அடி ஆ) 7 அடி இ) 8 அடி ஈ) 10 அடி
6. தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் ______________ சுருங்கி விட்டது.
   அ) மேதினி ஆ) நிலா இ) வானம் ஈ) காற்று
7. ‘சித்தம்’ என்பதன் பொருள் ______________
   அ) உள்ளம் ஆ) மணம் இ) குணம் ஈ) வனம்
8. தொன்மை என்ற சொல்லின் பொருள் ______________
   அ) புதுமை ஆ) பழமை இ) பெருமை ஈ) சீர்மை
9. அவன் எப்போதும் உண்மையே ______________
   அ) உரைக்கின்றான் ஆ) உழைக்கின்றான்
   இ) உறைகின்றான் ஈ) உரைகின்றான்
10. சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி ______________
    அ) துருவப்பகுதி ஆ) இமயமலை இ) இந்தியா ஈ) தமிழ்நாடு

**II. எதிர்ச்சொற்களைப் பொருத்துக:** 4 × 1 = 4

11. அணுகு - தெளிவு
12. ஐயம் - சோர்வு
13. ஊக்கம் - பொய்மை
14. உண்மை - விலகு

III. **கோடிட்ட இடங்களை நிரப்புக:** 6 × 1 = 6

15. அணுவைப் பிளந்து ______________ எடுக்கிறான்.
16. "சோபியா" ரோபோவுக்கு குடியுரிமை வழங்கிய நாடு ______________
17. மிக நீண்ட தொலைவு பறக்கும் பறவை ______________
18. இந்தியாவின் பறவை மனிதர் ______________
19. உடல் உறுப்பினை மாற்ற ______________ கண்டுபிடித்தான்.
20. "ரோபோ" என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர் ______________

IV. **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி:** 5 × 2 = 10

21. மனிதர்களுக்கு மருந்தாக விளங்குவது எது?
22. இயற்கை போற்றத்தக்கது ஏன்?
23. நீங்கள் அறிந்த தமிழ்க்காப்பியங்களின் பெயர்களைக் கூறுக.
24. உயிருள்ள உடல் எது?
25. நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள்?
26. காணிநிலம் பாடலில் பாரதியார் வேண்டுவன யாவை?

V. **எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி:** 3 × 3 = 9

27. தமிழகத்தின் பழமையான பகுதிகள் யாவை? விளக்குக.
28. இயந்திர மனிதனின் பயன்களை விளக்குக.
29. விளைவுக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது?
30. சிட்டுக்குருவியின் வாழ்க்கைப் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

VI. **மனப்பாடப் பாடல்:** 5

31. 'காணி நிலம்' பாடலை அடிபிறழாமல் எழுதுக.

VII. **கடிதம் எழுதுக:** 1 × 5 = 5

32. நூலக வசதி வேண்டி விண்ணப்பம் வரைக.

VIII. **"அறிவியலால் ஆள்வோம்" பாடப்பகுதியைக் கொண்டு பொருள் புரிந்து வாக்கியங்களை வரிசைப்படுத்துக:** 7 × 1 = 7

33. அ) செய்தித் தொடர்பில் சிறக்கின்றான்
    ஆ) இயற்கை வளமும் புயலும் மழையும்
    இ) எலும்பும் தசையும் இல்லாது இயங்கும்
    ஈ) செயற்கைக்கோளை விண்ணில் ஏவி
    உ) இணைய வலையால் உலகம் முழுமையும்
    ஊ) உள்ளங்கையில் கொடுக்கின்றான்
    எ) எங்கே என்று உரைக்கின்றான்

IX. **சொற்றொடரில் அமைத்து எழுதுக:** 4 × 1 = 4

34. நாள்தோறும்
35. வெளிநாடு
36. தனிச்சிறப்பு
37. வாழ்நாள்